Utdanningsdirektoratet

# Eksamen

16.11.2011

## PSP5311 Tamil nivå III
## Privatistar / Privatister

Nynorsk/Bokmål

## Nynorsk

| Eksamensinformasjon | |
|---|---|
| **Eksamenstid** | Eksamen varer i 5 timar. |
| **Hjelpemiddel** | Alle hjelpemiddel er tillatne, bortsett frå Internett og andre verktøy som kan brukast til kommunikasjon.<br><br>For norsk, samisk, finsk som andrespråk og framandspråka er heller ikkje omsetjingsprogram tillatne. |
| **Bruk av kjelder** | Dersom du bruker kjelder i svaret ditt, skal dei alltid førast opp på ein slik måte at lesaren kan finne fram til dei.<br><br>Du skal føre opp forfattar og fullstendig tittel på både lærebøker og annan litteratur. Dersom du bruker utskrift eller sitat frå Internett, skal du føre opp nøyaktig nettadresse og nedlastingsdato. |
| **Kjelder** | |
| **Informasjon om vurderinga** | Sjå vurderingsrettleiinga med kjenneteikn på måloppnåing til sentralt gitt skriftleg eksamen. Vurderingsrettleiinga finn du på www.utdanningsdirektoratet.no. |

## Bokmål

| Eksamensinformasjon | |
|---|---|
| **Eksamenstid** | Eksamen varer i 5 timer. |
| **Hjelpemidler** | Alle hjelpemidler er tillatt, bortsett fra Internett og andre verktøy som kan brukes til kommunikasjon.<br><br>For norsk, samisk, finsk som andrespråk og fremmedspråkene er heller ikke oversettelsesprogrammer tillatt. |
| **Bruk av kilder** | Hvis du bruker kilder i besvarelsen din, skal disse alltid oppgis på en slik måte at leseren kan finne fram til dem.<br><br>Du skal oppgi forfatter og fullstendig tittel på både lærebøker og annen litteratur. Hvis du bruker utskrift eller sitat fra Internett, skal du oppgi nøyaktig nettadresse og nedlastingsdato. |
| **Kilder** | |
| **Informasjon om vurderingen** | Se vurderingsveiledningen med kjennetegn på måloppnåelse til sentralt gitt skriftlig eksamen. Vurderingsveiledningen finner du på www.utdanningsdirektoratet.no. |

# Oppgave 1 / பகுதி  1

கீழ் தரப்பட்ட உரையை வாசித்த பின் கீழ் காணும் வினாக்களுக்கு விடையை தமிழில் எழுதுக.

இந்நூற்றாண்டில் இருநூறு மொழிகள் அழிந்து போகும் நிலையில் உள்ளன. தமிழுக்கும் இந்நிலை ஏற்படுமோ என்னும் அச்சம் தமிழ் ஆய்வாளர்களிடம் வளர்ந்து வருகின்றது. கல்வி என்பது அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதது. அது தொழில் சார்ந்ததாக அல்லது பண்பாடு சார்ந்ததாக அமையும். கல்வி கற்பதற்கு மொழி ஓர் ஊடகம். எனவே எமது எண்ணங்களை எடுத்துக்கூற அது தேவையாகின்றது.

இந்த 21 ஆம் நூற்றாண்டில் தமிழ் பேசாத தமிழர் தொகை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. இவர்கள் தொழில் தேடி ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், அவுஸ்ரேலியா போன்ற நாடுகளுக்கு சென்றவர்களின் வாரிசுகளாவர். இவர்கள் தொழில் பெறுவதற்கு தமிழ் மொழிக்கல்வி உதவியளிக்கவில்லை. இவர்கள் தமிழைத் தெரிந்து வைத்திருக்கவும் முயற்சி எடுக்கவில்லை. ஆனால் மலேசியத் தமிழர்களும், சிங்கப்பூர் தமிழர்களும் இதற்கு விதிவிலக்கானவர்கள். ஏனெனில் தமிழைப் பேணுவதற்கு அங்குள்ள அரசாங்கம் ஒத்துழைப்பு நல்கி வந்தது. ஆனால் தற்போது இன்றைய இளைய தலைமுறையினர்களில் பலர் தமிழ் பேசுகின்றார்களே அன்றி எழுத வாசிக்க தெரியாதவர்களாகவே இருக்கின்றார்கள்.

தமிழ் நாட்டில் ஆறுகோடி தமிழ்மக்கள் வாழுகின்றார்கள். ஆனால் உயர்மட்டத்தில் வாழுகின்ற தமிழர்கள் ஆங்கிலமொழியில் மோகம் கொண்டிருப்பதால் தமது பிள்ளைகளுக்கு பாலர் பிரிவிலிருந்தே ஆங்கில மொழி மூலம் கல்வியைக் கற்பிக்கின்றார்கள். ஆகவே தமிழ் நாட்டிலும் தமிழ் மொழியின் நிலைக்கு ஓர் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. தமிழ்மொழியை அதன் அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டுமானால் அறிவியல் தொழில்நுட்பவியலில் ஆங்கில மொழிக்கு ஈடுகொடுக்க கூடிய சொற்களைக் கண்டு பிடிக்க வேண்டும். இது சாத்தியமாகுமா என்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது என ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

தொழில்சார்ந்த மொழிக்கு அடுத்ததாக பண்பாடு சார்ந்த மொழியும் தமிழ் மொழி அழிந்து போகாமல் இருக்க பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்றாகும். பண்பாடு என்பது கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள், கற்கும் கலைகள், கையாளும் நம்பிக்கைகள் மூலம் பிரதிபலிக்கப்படலாம். பழக்கவழக்கங்கள் தலைமுறைக்கு தலைமுறை மாறலாம். கலைகள் கற்பதற்கு தெலுங்கு, கன்னடம் போன்ற பிற மொழியே ஆதிக்கம் பெற்றிருந்தது. பிற்காலங்களில் அவை தமிழில் மொழிபெயற்கப்பட்டு தமிழ் நாட்டில் பாவிக்கப்படுகின்றன. வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தமது பிள்ளைகளுக்கு கலைகளை கற்பிக்கின்றார்கள். ஆனால் அநேகமான கலைகற்பிற்கும் ஆசிரியர்கள் தமிழ்பாடல்களை ஆங்கிலத்தில் அல்லது அவர்கள் வாழும் நாட்டு மொழியில் எழுதிக் கொடுக்கின்றார்கள். இந்நிலை தொடருமானால் தமிழ் மொழிப் பாவனை சிறிது சிறிதாக மறைந்து போகலாம்.

**கீழ்வரும் வினாக்களுக்க விடை எழுதுக.**

1 எமது எண்ணங்களை வெளிப்படுத்த எமக்கு முக்கியமாக தேவைப்படுவது எது?

2 சில நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழ் மொழியை பேச, எழுத தெரியாதவர்களாக இருப்பதன் காரணங்கள் யாது?

3 தமிழ் நாட்டில் தமிழ் மொழி அழிந்து போக காரணியாக இருப்பவை எவை?

4 வாரிசு, பண்பாடு, சாத்தியம், பிரதிபலிப்பு என்ற சொற்களை நீங்கள் எவ்வாறு புரிந்து கொள்கின்றீர்கள்.

5 இப்பகுதியில் நீங்கள் விளங்கிக் கொண்டதை சுருக்கமாக எழுதுக.

## Oppgave 2 / பகுதி 2

பின்வரும் பந்தியை வாசித்து பிழையான சொற்களை கண்டு பிடித்து திருத்தி எழுதுக.

எம்மை சூளவுள்ள வழிமண்டலம் நாம் உயிர் வாழ மிகவும் அத்தியாவசியமாநது. அது எமக்கு வேன்டிய பிராணவாயுவைத் தறுவதுடன் சூரியனில் இருந்து வெளிவறும் ஆபத்தான கதிர் வீச்சுகளில் இருன்தும் எரி கற்களில் இருந்தும் எம்மை காப்பாற்றுகின்ரது. சூறிய வெப்பத்தை பூமியின் மேற்பறபில் சீராக பரப்புவதற்கும் கால நிளை வேறுபாட்டிற்கும் ஒரு காரணியாக அமைகின்றது.

**உதாரணம்: எம்மை சூழவுள்ள .....**

## Oppgave 3 / பகுதி 3

பின்வரும் மரபுத்தொடரை வைத்து பொருள் விளங்க வசனங்கள் எழுதுக
உதாரணம்: உள்ளங்குளிருதல்
தாய் தனது மகன் பரீட்சையில் திறமைச் சித்தி அடைந்ததை கேள்வியுற்று உள்ளங்குளிர்ந்தாள்.

1 அகடவிகடம்
2 புறக்கணித்தல்
3 மனப்பூர்வம்
4 குருட்டுத்தனம்
5 ஆறப்போடுதல்

## Oppgave 4 / பகுதி 4

மாகாணஅதிபருக்கு (fylkesmann) ஒரு முறையீட்டுக் கடிதம் ஒன்று தமிழில் எழுதுக.

பொதுசன போக்குவரத்து சாதனங்கள் சரியான நேரத்திற்கு வராமையால் மாணவர்கள் பாடசாலைகளுக்கு தாமதமாக செல்ல வேண்டியுள்ளது. இது பற்றி முறையீடு செய்து மாகாணஅதிபருக்கு ஒரு கடிதம் எழுதுக.

## Oppgave 5 / பகுதி 5

உங்கள் கருத்தை தமிழில் எழுதுக

தற்போது பாடசாலைகளில் மாணவர்கள் சுயமாகவே சிந்தித்து செயற்படும் கல்விமுறை கையாளப்படுகின்றது (இணையதளத்தில் தகவல் சேகரித்தல், குழுவாக செயற்படல் போன்றன) இதுபற்றிய உங்கள் கருத்தை எழுதுக. அதனால் ஏற்படும் நன்மை தீமைகள் எவை?

Blank side

Schweigaards gate 15
Postboks 9359 Grønland
0135 OSLO
Telefon 23 30 12 00
www.utdanningsdirektoratet.no

Utdanningsdirektoratet